முருகப்பெருமான் துணை

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.02.2023, சனிக்கிழமை

1. அறமாக வாழும் ஞானியே
   ஆறுமுக அவதாரமாக வந்து
   வரமாக மக்களுக்கு அருளி
   வாழ்வளிக்கும் உயர் தவசியே
2. தவசியே அரங்க மகானே
   தானுன் பெருமை கூறியே
   அவனியில் அனுகூல ஆசிதனை
   ஆற்றல்பட சுபகிருது சால்திங்கள்
3. திங்களிலே சஷ்டிதிகதி காரிவாரம்
   தேசிகனுக்கு காரைக்கால் அம்மையாரும்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 06 ம் நாள், 18.02.2023 சனிக்கிழமை)
   ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
   ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கமகானின்
   ஆற்றலே தனி பலமாகும்
   அருளும் பொருளும் தேடிநிற்பவர்
   அரங்கன் பிரணவக் குடில்நாடி
5. நாடியே ஞானவழி வந்தால்
   ஞான தேசிகனார் கரம்பட
   நாடியே தீட்சை வரம்பெற்றால்
   நன்மை அளவிலாப் பெருகும்
6. பெருகும் அருளும் பொருளுமாக
   பிழையற சர்வ சித்தியுமாக
   உருகியே அனுதின செபதபம்
   ஓங்காரம்பட சடாட்சர உரு
7. உரு ஏற்ற உள்ளுள் யாவர்க்கும்
   உயர்வான ஓங்கார நாதம்
   குருவருளாகத் திருவருளாக மாறி
   குவலயமெங்கும் நிரம்பி நிற்கும்
8. நிற்கவே பேருலகம் தானும்
   நிலைகுலைவான பேரிடரையும்
   அற்புதமாய் வென்று மீண்டு
   ஆற்றல்மிக்க பாதுகாப்புமிக்க
9. மிக்க ஞானபூமியாக மாறும்
   மேலவர்கள் வானவர்களுமே
   ஆக்கமுடன் வந்து நல்கி
   அகிலமெங்கும் சக்தியாகி

10. ஆகியே ஆறுமுகப் பெருமானை
அழைத்திடும் வெளிப்படுத்தும் வண்ணம்
மகிழவே இப்புவியை மாற்றி
மனிதர்களை மகான்களாக்கி

11. ஆக்கியே ஓங்காரம் மிகுந்த
ஆற்றல்மிக்க ஞானயுகம்படைத்து
தேக்கமின்றி அரங்கன் நோக்கமதை
தேசமெங்கிலும் அரங்கேற்றுவர்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–